**தலைப்பு 102 – நிதி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 102 – நிதி அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூன் 30 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 3,552.71 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 3,173.76 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 378.95 மில்லியன் அல்லது 10.66 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,068.81 | 964.34 | 104.47 | 9.77 |
| மூலதனம் | 2,483.90 | 2,209.42 | 274.48 | 11.05 |
| மொத்தம் | 3,552.71 | 3,173.76 | 378.95 | 10.66 |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய விடய இலக்கம் 10201 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 19.00 | 18.92 | 10.50 | 11.00 | 70.00 | 44.66 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் 7002/0000/00/0266/0016/000 ஆம் இலக்க கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 3.0 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 4 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 85.81 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன்கள் |
| 6000/0000/00/0001/0085/000 | 0.03 |
| 6000/0000/00/0002/0102/000 | 0.15 |
| 6000/0000/00/0016/0050/000 | 85.18 |
| 6000/0000/00/0018/0062/000 | 0.45 |
| **மொத்தம்** | 85.81 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

நிதி அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தினால் கணக்கீட்டு உத்தியொகத்தராக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மேற்குறித்த ஒதுக்கீட்டு கணக்குகள் அவற்றிற்கான இணக்கக்கூற்றுக்களுக்கு புறம்பானதொரு நிதிக்கூற்றுக்களானமையால்

அந்தக் குடியரசின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

அமைச்சினால் கிழே குறிப்பிடப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | **பதிவேடுகளின் வகை** | **உரிய பிரமாணம்** |
|---|---|---|
| (அ) | கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | நட்டங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (இ) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |

### 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 10201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் போது பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியை விட்டுச்சென்ற ஐந்து உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய தொகை ரூபா 901,667 ஆகக் காணப்பட்டது. அது 2 இலிருந்து 12 வருடங்கள் வரையான காலப்பகுதியாகக் காணப்பட்டது. அறவிடுகையினை பூர்த்தியாக்குவதற்கு அல்லது பொருத்தமான அளவிடுகையினைப் பெற்று தீர்ப்பனவு செய்வதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது மாதாந்த கட்டுப்பாட்டுக் கணக்குகளினை தயாரிப்பதற்கு மற்றும் சீசீ-10 மீதி பதிவேட்டினை பராமரிப்பதற்கு அமைச்சு செயற்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயலாற்றல்

நிதியமைச்சின் நிதிசார் மற்றும் அதன் திறைசேரி திணைக்களங்களின் கீழ் வேலைபுரியும் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வீட்டுத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2015 ஆம் மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே அது ரூபா 270 மில்லியன் தொகை மற்றும் ரூபா 600 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் மொத்த ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டில் ஏற்பாடுகள் மற்றுமொரு நோக்க குறியீட்டிற்கு முழுமையாக மாற்றப்பட்டிருந்தது. மற்றுமொரு முன்னுரிமையைக் கொண்டிருந்தமை மற்றும் புதிய திறைசேரி கட்டிடத்தின் உடனடி தேவையினால் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம், மற்றுமொரு நோக்க விடயத்திற்கு வழங்கப்பட்ட தொடர்புடைய ஏற்பாடுகள் மாற்றப்பட்டிருந்தது என அமைச்சு கூறியிருந்தது.

## 3.4 அரச பெறுகைகள் வழிகாட்டல் நடைமுறையிலிருந்தான விலகல்கள்

பின்வரும் அவதானிப்புகள் காணப்படுகின்றன.

(அ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் 2017 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட உரையின் 850 பிரதிகளை நிதியமைச்சு அச்சிட்டிருந்ததுடன் ஆங்கில மொழியில் 200 பிரதிகள் மாத்திரம் ஒட்டுமொத்தமாக 1050 பிரதிகள் அச்சிடப்பட்டிருந்தது. மொத்தச் செலவினம் ரூபா 20.75 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் மூன்று மொழிகளின் பிரதியொன்று ரூபா 22,774 ஆகக் காணப்பட்டதுடன் ஆங்கில் மொழியின் பிரதியொன்று ரூபா 6,946 ஆகக் காணப்பட்டதுடன் அது மிக அதிக கிரயமாகக் காணப்பட்டது.

(i) 2014 யூலை 04 இன் 28 ஆம் இலக்க அரச பெறுகைகள் நடைமுறையின் பிற்சேர்ப்பு பின்பற்றப்பட வேண்டியதுடன் அரச பெறுகைகள் நடைமுறையிலிருந்தான வேறுபாடுகள் காணப்பட்ட பொழுதில் இடம்பெற்ற வேறுபட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

- அரச பெறுகைகள் நடைமுறையின் பிரகாரம், ரூபா 10 மில்லியனுக்கு அதிகமான பெறுகைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். ஆனால், இந்த ரூபா 20.75 மில்லியன் பெறுகை அமைச்சு பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- அரச பெறுகைகள் வழிகாட்டிகளிலிருந்து வேறுபாடுகள் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அதற்கான காரணம் தெளிவாக பதிவிடப்பட்டிருத்தல் வேண்டும். அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்படல் வேண்டும் அவ்வாறு புரிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆகக்கூடியது 1000 பிரதிகளினை அச்சிடுவதற்கு பெறுகைகள் குழு அங்கீகரித்தது. அச்சிடுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து மற்றுமொரு 50 பிரதிகளுடன் 1050 பிரதிகள் அச்சிடப்பட்டிருந்தது.

(ஆ) அரச அபிவிருத்தி செயற்திட்டத்தின் அமைச்சர்களின் மேற்பார்வைக்கு போக்குவரத்து வசதிகளினை வழங்குவதற்கு, 2016 ஆம் ஆண்டில் தனியார் போக்குவரத்து சேவை நிறுவகமொன்றிற்கு ரூபா 3.28 மில்லியனை அரசு செலுத்தியிருந்தது. நிதியமைச்சினால் 2016 யூலை 11 இல் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தில் சந்தையில் போட்டி விலைகள் கருத்திற்கொண்டமை குறிப்பிடப்பட்டிருந்ததுடன் போக்குவரத்து சேவை நிறுவகமொன்றிடமிருந்து போக்குவரத்து சேவைகள் எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட சேவையின் பிரகாரம், போட்டி அடிப்படையில் அரச பெறுகைகள் வழிகாட்டிகளினைப் பின்பற்றாது நிறுவகமொன்று நேரடியாக தெரிவு செய்யப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(இ) அமைச்சு கேட்போர் கூடத்தில் தொலைத்தொடர்பு முறைமையின் திருத்தத்திற்கு, போட்டி விலைகள் அழைக்கப்பட்டிருக்கவில்லை. விசேடதொரு நிகழ்வாக இது கருத்திற்கொள்ளப்பட்டு, முறைமையின் ஆரம்ப பொருத்துதல்களினை மேற்கொண்ட நிறுவகத்திடமிருந்து ரூபா 1.10 மில்லியனுக்கு கொள்வனவு செய்வதற்கு பெறுகைகள் குழு நேரடியாக அனுமதித்திருந்தது. எவ்வாறாயினும், இந்த பெறுகை நிகழ்வொன்றாக மேற்கொள்ளப்பட்டமையினால், எப்போதாவது என்ற காரணங்கள் நிலவியமையினால் பெறுகைகள் வழிகாட்டியின் 3.5.1 இன் பிரகாரம் கணக்காய்வு மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) 2016 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களினை கவர்வதற்காக சர்வதேச வியாபார சமூகத்தினை விழிப்புணர்வூட்டுவதற்காக இரண்டு உள்ளக ஊடக நிறுவனங்களுக்கு ரூபா 40.65 மில்லியன் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொண்டிருக்காததுடன் முதலீட்டு மேம்படுத்தல்களினையும் அமைச்சு மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) இந்த ஊடக சேவையினை வழங்கும் போது, அதிக நிதிசார் அனுகூலமான மற்றும் தரமான சேவை வழங்குனரை தெரிவு செய்வதற்கான அரச பெறுகைகள் வழிகாட்டியின் ஏற்பாடுகளினைக் கருத்திற்கொள்ளாது இவ் ஊடக சேவை நிறுவனம் நேரடியாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தது.

ஆகையினால், அமைச்சரவை அங்கீகாரம் பின்னர் பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.6 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சின் பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர்கள் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 46 | 31 | 15 |
| (ii) | மூன்றாம் நிலை | 9 | 06 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 154 | 119 | 35 |
| (iv) | ஆரம்ப நிலை | 183 | 178 | 05 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 57 | 36 | 21 |
| | **மொத்தம்** | **449** | **370** | **79** |

திறைசேரி பிரதிச் செயலாளர்களுக்கான ஒரு வெற்றிடம் உள்ளடங்கலாக சிரேஷ்ட நிர்வாக மட்டத்தில் 06 வெற்றிடங்கள் காணப்பட்டன.